மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) & (இ) மைய அரசு 10-12-1971 அன்று மக்கள் சபையில் 1971-ஆம் ஆண்டின் பணிக் கொடை வழங்கல் சட்ட முன்வடிவு கொண்டுவந்து இந்தச் சட்ட முன் வடிவு பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. பணிக்கொடை ஆண்டு ஒன்றுக்கு 15 நாள் ஊதியம் என்பதற்கு மாறாக, ஒரு மாத ஊதியம் வழங்க வழி செய்யும் வகையில் சட்ட முன்வடிவைத் திருத்த மைய அரசை இந்த அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இந்த கிராஜுவிட்டியைப் பொறுத்த வரையில் நாம் முன்னாலேயே சட்டத்தைக் கொண்டுவரலாமே, ஒரு மாத போனஸ் என்று தமிழக அரசே கொண்டுவந்து ஒரு சட்டத்தைப் போட்டு அகில இந்தியாவுக்கும் வழிகாட்டியாக இருக்கக் கூடிய வகையில் அமைச்சர் அவர்கள் சட்டத்தைக் கொண்டுவருவார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, அந்தக் கருத்தைத்தான் டெல்லியிலே நடைபெற்ற தொழிலாளர் மாநாட்டிலே வற்புறுத்தினேன். ஆனால், மத்திய அரசு தொழிலாளர் நல அமைச்சர் இந்தியா முழுவதற்கும் ஒரு சீராக சட்டம் இருப்பது நல்லது என்பதால் அப்படிக் கொண்டுவருவதாகச் சொன்னார்கள். இப்பொழுது நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது எந்த வகை யிலே நிறைவேற இருக்கிறது என்று பொறுத்திருந்து பார்த்து, நாம் நம்முடைய பரிந்துரையைச் செய்யலாம்.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்தச் சட்டத்தை இந்த 1972 ஆம் ஆண்டிலாவது கொண்டுவருவதற்கு ஏற்பாடு உண்டா ? இந்த வருஷமே இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு மத்திய சர்க்காரை இந்த சர்க்கார் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, எவ்வளவு விரைவில் கொண்டுவர வேண்டுமோ அந்த அளவிற்குக் கொண்டுவர வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

House-sites for Harijans in Erode taluk

*** 708. *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the reasons for the delay in providing house-sites for the Harijans in Ganapathi-palayam, Samiarpalayam, Kammalakuttai, Vamalaigounden-palayam, Vaduhanpalayam and Thalaraipalayam in Uttukuli firka of Erode taluk ?**

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கவுண்டன்பாளைய கிராமத் தின் குக்கிராமமாகிய வாமலைக்கவுண்டன்பாளையத்தைப் பொறுத்த மட்டில் 4 (1) பிரிவின்கீழ் முன்மொழிவு ஏற்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது. பிரிவு 6-ன் கீழ் செயற்குறிப்பு கோயம்புத்தூர் மாவட்ட

ஆட்சியரின் பரிசீலனையிலுள்ளது. மற்றக் கிராமங்களைப் பொறுத்த மட்டில் பிரிவு 4 (1)-ன் கீழ் நிலத்தைக் கையகப்படுத்தும் செயற் குறிப்புகள் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரின் பரிசீலனையிலுள்ளன.

அரிசனங்களுக்குக் குடியிருப்புகள்

*709 **வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த புதிய திட்டம் ஏதேனும் வகுத்து மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது அனுப்பப்பட்டது, தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) 1964-ஆம் ஆண்டிலிருந்து மத்திய சர்க்காருடன் கடிதப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. சமீபத்தில் 3-2-1972-லும் கடிதம் வரையப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த வீடு கட்டும் திட்டத்திற்காக 1964-ஆம் ஆண்டிலிருந்து தொடர்பு கொள்ளுவதாக சொல்லப்படுகிறது ? ஏன் அதற்கு இவ்வளவு காலதாமதம் ஆகிறது ? இதைத் துரிதமாகச் செய்ய மாநில அரசு மத்திய சர்க்காரிடம் கேட்க விரைவில் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, இது மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டு இருக்கும் திட்டம் அல்ல. மத்திய அரசே மாநில அரசிடத்தில், இந்த 1,000 ரூபாய் திட்டத்தில் கட்டப்படுகிறதே அதற்குப் பதிலாக இன்னும் அதிக அளவில் கட்டடைப் டிசைன் போட்டு கட்டப்படக் கூடாதா என்ற கேள்வியை எழுப்பினார்கள். 2,680 ரூபாய் 2,850 ரூபாய் என்ற இரண்டு திட்டங்களை வரைந்தெடுத்து மத்திய அரசுக்கு அனுப்பினோம். அப்பொழுது 50 சத விகிதம் மானியம் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டோம். அதற்கு ஒத்துக் கொண்டார்கள். பிறகு அந்த வீடும் போதாது, 5,000 ரூபாய் வரையிலுள்ள திட்டத்தை 1970 மே மாதத்தில் கேட்டார்கள். அதற்கும், 5,000 ரூபாயில் வீடு கட்டும் திட்டத்தைப் போட்டு அனுப்பி, அது முழுவதையும் மானியமாக மத்திய அரசு கொடுக்க வேண்டுமென்று கேட்டோம். அதற்கு முழு மானியம் கொடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு இந்தத் திட்டம் ஒத்துக்கொள்ளப்பட்டதாகப் பதில் வரவில்லை. கடந்த மாதம் கூட நினைவுபடுத்திக் கடிதம் எழுதியிருக்கிறோம்.